## மஹவ பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள ரூபா 441,353 பெறுமதியான அம்பகொல வெவ முன்பள்ளி மற்றும் ரூபா 1,143,391 பெறுமதியான வலலிய நூலகக் கட்டிடம் என்பனவற்றின் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுமதிகளைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வாகனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 259,861 பெறுமதியான மீதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | கடன் மீதிகளைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை என்பதனைக் குறிப்பிடுகின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் தளபாடம் மற்றும் பொறுத்துதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த சிறுவர் பூங்கா தளபாடங்கள் பொறுத்துதல் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,312,500 ஆயினும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 3,112,500 எனக் காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பெறுமதி எதிர்வரும் கணக்குகளில் இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடுகின்றேன். |
| (ஈ) | ரூபா 17,363,032 பெறுமதியான 11 | நிதிக் | கணக்காய்வு |

| | | |
|---|---|---|
| கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சஎழுத்து மூலமான ான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடைபெற்ற சந்தர்ப்பத்தில் நிலவிய நிலவரத்திற்கு அமைய இப்பதிவுகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சோஷலிச ஜனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 (5) | முற்பணம் தீர்க்கப்பட்டிருக்க வில்லை | நிதிப்பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டும். | விழா செலவினத்திற்காக உரிய முற்பணம் பெறப்பட்டு செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படா மையினால் தீர்க்கப்படவில்லை எனக் காட்டப்பட்டாலும் அவை உரிய நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டுள்ளன எனக் குறிப்பிடுகின்றேன். |

## 1.5 போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல வருட காலமாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ஆனால் பௌதீகமாகக் காணப்படாத ரூபா 541,322 பெறுமதியான பஸ் தரிப்பிட | முறையான அனுமதியுடன் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை | பல வருட காலமாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ஆனால் பௌதீகமாகக் காணப்படாத பஸ் தரிப்பிட நிர்மாண இருப்பு போலிச் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண இருப்பு முறையாக அங்கீகரிக்கப்படாது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | சொத்து ஒன்று என்பதனால் சபை அங்கீகாரத்துடன் பதிவேடுகளில் இருந்து அகற்றி ஏடுகளை நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பல வருடங்களாகக் காணப்படும் ரூபா 4,887,933 பெறுமதியான நிர்மாணக் கடன்பட்டோர் மீதி, ரூபா 6,658,760 பெறுமதியான தீர்க்கப்படாத முற்பணம், ரூபா 761,854 பெறுமதியான மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பெயரில் காணப்படும் கடன்பட்டோர் மீதி, ரூபா 4,443,019 பெறுமதியான நிர்மாணக் கடன்பட்டோர் மீதி மற்றும் 16 வீதவரி அலகுகள் என்பனவற்றிற்காக பல ஆண்டுகளிற்கான பட்டியலிடுதல் எனக் குறிப்பிடப்பட்ட ரூபா 245,724 பெறுமதியான நிலுவை என்பன முறையான அனுமதியின்றி புத்தகங்களில இருந்து பதிவழிக்கப் பட்டுள்ளது. | முறையான அனுமதியுடன் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் நீண்ட காலமாக நிலவிவரும் கடன் கொடுத்தோர், கடன் பட்டோர் மற்றும் முற்பண நிலுவைகள் ஆயினும் அது தொடர்பாக தகவல்களை உறுதி செய்து கொள்வதற்கான எவ்வித சான்றுகளும் சபை வசம் இல்லை. அதனால், ஏடுகளை நாளது வரையறுப்பதற்காக 2020.03.10 ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபையில் மேற்கொள்ளப்பட்ட 03 ஆம் இலக்க முடிவிற்கு அமைய ஏடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடுகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,904,343 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,682,032 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,379,712 | 5,853,348 | 6,110,870 | 3,760,225 | 5,804,712 | 5,641,448 | 4,601,969 | 4,017,748 |
| (ii) | வாடகை | 13,775,000 | 13,172,540 | 12,551,835 | 806,887 | 12,375,000 | 12,642,792 | 12,549,490 | 186,182 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 776,000 | 838,930 | 838,930 | - | 956,000 | 880,710 | 880,434 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 95,669,395 | 82,464,940 | 96,674,282 | 16,744,013 | 106,272,000 | 76,439,539 | 62,259,370 | 30,958,355 |
| | மொத்தம் | 115,600,107 | 102,329,758 | 116,175,917 | 21,311,125 | 125,407,712 | 95,604,489 | 80,291,263 | 35,162,285 |

குறிப்பு

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமன பெறுமதியில் கடந்த ஆண்டுகளில் உரிய நிலுவை பெறுவனகளும் உள்ளடக்கும். 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் அதற்கு முந்திய ஆண்டின் வருமானம் ரூபா 25.7 மில்லியன் ஆகும்.

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 216 வியாபார அலகுகளுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 418,200 தொகையை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார வரி மற்றும் நிர்மாண வரி என்பனவற்றை செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாக அறியத் தருகின்றேன். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி மதிப்பீட்டின் பின் புதிய நிர்மாணப் பணிகள் பரிசீலனைகளுக்கு உட்படுத்தப்பட்டு. மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய நிர்மாணப் பணிகள் மதிப்பிடப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட நிலைமையை ஏற்றுக் கொள்கின்றேன். |

**2.2.3 வேறு வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 176 வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 199,633 பெறுமதியான நீர் வருமான நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. | உரிய காலத்தினுள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்நிலுவையை அறவிடுவற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 1,895,550 ஆகும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 8,600,000 பெறுமதியான 04 நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பாதீடு செய்யப்பட்ட நிர்மாணப் பணிகளை செயற்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | போதியளவு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ள முடியாமையினால் அப்பணிகளை பிற்போட வேண்டியேற்பட்டது. எனினும், தேவையைக் கருதி 2020 வரவு செலவுத்திட்டத்திற்கு உட்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு ஆண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்தையுடைய ரூபா 6,269,982 பெறுமதியான தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் உட்பட கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் திட்ட மொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு ஆண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்தையுடைய ரூபா 8,764,263 செலுத்த வேண்டிய நிலுவையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக உள்ள கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,258,518 பெறுமதியான வைப்புப் பணத்தில் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பை இனங்கண்டு மீளச் செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஐய வினாவில் குறிப்பிட்டட்ட வைப்புக்களில் மீளச் செலுத்தாதவற்றை மட்டும் கணக்கிட்டு வருமானத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) பதவியணியினரின் பற்றாக்குறை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டன. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் பிரதான செயலாளரிடம் வேண்டப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) **ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் வேலை இடைநிறுத்தம், இடமாற்றம், மரணம் மற்றும் வேலை இடை நிறுத்தம் போன்ற காரணங்களினால் 10 உத்தியோகத்தர்களிடம் ரூபா 343,011 பெறுமதியான தொகை நிலுவை மீதியாக அறவிட வேண்டியிருந்தது. | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவையாகவுள்ள உத்தியோகத்தர்களின் கடனை அறவிடுவதற்கு எங்களால் முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம். சில உத்தியோகத்தர்களைத் தேடிக் கொள்வதில் உள்ள சிக்கல் போன்ற நடைமுறை சிக்கல்கள்கள் காரணமாக இப்பணி தாமதமாகி யுள்ளதாக தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 11,145,000 பெறுமதியான 07 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிக்கப்படாத 45 காணிகள் என்பனவற்றின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வாகனத்தைக் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பொது காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கான அனுமதி பெறுவதற்கு பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. |

### 3.4.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 362,500 பெறுமதியான 02 வாகனங்கள் பல ஆண்டுகள் பயன்படுத்தப் படாதிருந்தன. | பயன்படுத்தப்படாத சொத்துக்களை புதுப்பிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இங்கு குறிப்பிடப்பட்ட வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு வடமேல் மாகாண உள்ளுராட்சிமன்ற திணைக்களத்திற்கு சபை அறிவித்திருப்பதனைக் குறிப்பிடுகின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு 2016 செப்தெம்பர் 22 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த மஹவ பொதுச் சந்தையின் கடைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து 2019 திசம்பர் 31 திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் குறைந்தது ரூபா 2,583,000 ஆன தொகை சபைக்குக் கிடைக்காது போயிருந்தது. | காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சபையின் வருமானம் ஈட்டக்கூடிய நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இக்கடைகள் அனைத்துக்கும் மின் வழங்கி வாடகைக்கு விடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். |

**3.5 பெறுகை**

**வழங்கல் மற்றும் சேவை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் சுடலைச்சாலைக்காக ரூபா 151,900 பெறுமதியான மின் பிறப்பாக்கி, ரூபா 99,650 பெறுமதியான டோனர் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரல் இறுதித் திகதிக்கு முன் திறக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு செயற்படுவதாகவும் உரிய உத்தியோகத்தர்களுக்கு விடயம் தொடர்பாக அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிய தருகின்றேன் |